பெயர் / சுட்டெண் : .....................

திரு.ச.சரவணபவன் BBA(Hons), PGDE, M.Ed

**அறிவுறுத்தல்கள் :**

- 1 தொடக்கம் 25வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவில் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 26 தொடக்கம் 40 வரையான வினாக்களிற்குரிய சுருக்கமான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. பின்வருவனவற்றில் எது/எவை நிதிக்கணக்கீட்டினது பண்பு/பண்புகளாக கருதப்படக்கூடியவை.

   A- வரலாற்று தகவல்களை மாத்திரம் பயன்படுத்துகிறது.

   B- உள்ளக, வெளியக பிரிவினர்களுக்கு தகவல்களை முன்வைக்கிறது.

   C- முகாமைத்துவத்துக்கு தேவையான சந்தர்ப்பங்களின் போது தகவல்கள் முன்வைக்கிறது.

   (1) A மாத்திரம் (2) A,B ஆகியன மாத்திரம்

   (3) B,C ஆகியன மாத்திரம் (4) A.C ஆகியன மாத்திரம்

   (5) A,B,C ஆகியன எல்லாம் ( _____ )

2. 2,3,4 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

   பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் பரதன் வியாபாரத்தில் இடப்பெற்றுள்ளன.

   01.04.2020 - நந்தனிடமிருந்து ரூ80000 கிரயமான சரக்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது

   06.04.2020 - நந்தனுக்கு ரூ10000 கிரயமுடைய சரக்குகள் திருப்பி அனுப்பப்பட்டன.

   15.04.2020 - ரூபா50000 கிரயமுடைய சரக்குகள் ரூ75000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

   24.04.2020 - ரூ15000 கிரயமுடைய பண்டங்கள் உடமையாளரால் சொந்த உபயோகத்திற்கு எடுக்கப்பட்டது.

   05.05.2020 - நந்தனுக்கு செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் கொடுத்து தீர்க்கப்பட்டது.

   30.04.2020இல் உள்ளவாறான பரதன் வியாபாரத்தில் மேற்படி கொடுக்கல்வாங்கல்களின் தாக்கத்தைக் காட்டும் கணக்கீட்டுச் சமன்பாடு

| | சொத்துக்கள்(ரூ) | = பொறுப்புக்கள்(ரூ) | + உரிமையாண்மை |
|---|---|---|---|
| (1) | +10000 | - | +10000 |
| (2) | +80000 | +70000 | +10000 |
| (3) | +150000 | +140000 | +10000 |
| (4) | +135000 | +140000 | - 5000 |
| (5) | + 65000 | +70000 | - 5000 |

( _____ )

3. பரதனுக்கும் நந்தனுக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களை அவை இடம்பெற்றதன்படி நந்தனது புத்தகங்களில் பதிவதற்கு பயன்படுத்தப்படும் மூலஆவணங்களின் ஒழுங்குவரிசை
   (1) விலைப்பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
   (2) விலைப்பட்டியல், செலவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
   (3) விலைப்பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு
   (4) விலைப்பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
   (5) விலைப்பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, பற்றுச்சீட்டு

( ______ )

4. மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக 31.03.2020இல் உள்ளவாறான பரதனின் வியாபாரத்தில் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகியவற்றின் மீதிகளில் ஏற்படும் அதிகரிப்பு.

| | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு(ரூ) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு(ரூ) |
|---|---|---|
| (1) | 80000 | 75000 |
| (2) | 70000 | 0 |
| (3) | 75000 | 70000 |
| (4) | 70000 | 75000 |
| (5) | 0 | 75000 |

( ______ )

5. "நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாக்கத்தின் படி" பின்வருவனவற்றுள் எத்தொகுதி நிதித்தகவல்களின் மேம்படுத்தும் பண்புசார் குணாதிசயங்கள்.
   (1) பொருத்தப்பாடு, உண்மையான பிரதநிதித்துவம்
   (2) பொருத்தப்பாடு, ஒப்பீட்டுத்தன்மை
   (3) உண்மையான பிரதிநிதித்துவம், காலம்தவறாமை
   (4) காலம்தவறாமை, விளங்கிக் கொள்ளக்கூடியதன்மை.
   (5) ஒப்பீட்டுத் தன்மை, நடுநிலைமை

( ______ )

6. கணக்கீட்டு பதிவுகளை முறையாகப் பராமரிக்காத நிறுவனம் ஒன்றின் பின்வரும் தவகல்கள் தரப்பட்டுள்ளன.

| விபரம் | 31.03.2020இல்(ரூ1000) | 31.03.2019இல்(ரூ1000) |
|---|---|---|
| மூலதனம் | 2600 | 2000 |
| நிறுத்திய வருவாய் | 1300 | 1000 |

உரிமையாளர் வருடாந்தம் தனிப்பட்ட தேவைக்காக வியாபாரத்தில் இருந்து ரூ200000 இனைப் பற்றி இருந்தார். இத்தொகையானது நிறுத்தி வைத்த வருவாய்க் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. 2020.03.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் மற்றும் 2020.03.31இல் உள்ளபடி தேறிய சொத்துக்கள் எவை?

| | வருடத்திற்கான இலாபம்(ரூ1000) | தேறிய சொத்துக்கள்(ரூ1000) |
|---|---|---|
| (1) | 500 | 3900 |
| (2) | 500 | 3500 |
| (3) | 100 | 3700 |
| (4) | 300 | 3900 |
| (5) | 300 | 3900 |

( ______ )

7. கீழே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையின் 2020.03.31இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய நிறுவனத்தின் காசுமீதி என்ன.
2020.03.31இல் வங்கிக்கூற்று மீதியின் படி வங்கிமேலதிகப்பற்று ரூ50000
2020.03.31இல் இன்னமும் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ180000
2020.03.31இல் இன்னமும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ150000
வாடிக்கையாளரது நேரடி வைப்புக்கள் ரூ75000
(1) ரூ20000 வரவு (2) ரூ20000 செலவு
(3) ரூ95000 வரவு (4) ரூ95000 செலவு
(5) ரூ80000 வரவு

( ______ )

8. 2016ஆம் ஆண்டில் ரூ1200 000க்கு கொள்வனவு செய்யப்பட்ட காணி ஒன்று 2020.03.31ஆம் திகதி நிதிக்கூற்றில் ரூ2000 000 மீள்மிதிப்பீட்டு பெறுமதி காட்டப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் பின்பற்றப்படாத கணக்கீட்டு எண்ணக்கருவும், மீள்மதிப்பீட்டுப் பெறுமதியை பதிவு செய்வதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற தரரீதியான பண்பும் எவை?

| | எண்ணக்கரு | தகுதியான பண்புகள் |
|---|---|---|
| (1) | வரலாற்றுக் கிரயம் | பொருத்தப்பாடு |
| (2) | அலகுசார் | பொருத்தப்பாடு |
| (3) | தோற்றத்திலும் பார்க்க கருத்து மேலானது | உண்மையான பிரதிநிதித்துவம் |
| (4) | வரலாற்றுக் கிரயம் | உண்மையான பிரதிநிதித்துவம் |
| (5) | தேறல் | பொருத்தப்பாடு |

( ______ )

9. பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றினால் 01.03.2020இல் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஒன்றுடன் தொடர்பானவை, இக்கம்பனி பெறுமதிசேர் வரிக்காகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

| | ரூ1000ல் |
|---|---|
| இயந்திரத்தின் பட்டியல் விலை [VAT நீங்கலாக] | 1250 |
| பெறுமதிசேர் வரி செலுத்தியது | 150 |
| போக்குவரத்துக் கிரயம் | 120 |
| அமைவிடம் தயாரித்தல் கிரயம் | 30 |
| நிர்மாணிப்புக் கிரயம் | 100 |
| ஆரம்பபரிசோதனைக் கிரயம் | 150 |

கொள்வனவின் போது 20% வியாபாரக்கழிவு பெறப்பட்டது. ஆரம்பரிசோதனையின் போது உற்பத்தி செய்யப்பட்ட 100 அலகுகள் அலகொன்றுக்கு ரூ500 ஆக விற்பனை செய்யப்பட்டது. LKAS - 16 (ஆதனம்,பொறி மற்றும் உபகரணம்) இன்படி ஆரம்ப இனங்காணலில் இயந்திரக்கிரயம்.

(1) ரூ1750 000
(2) ரூ1700 000
(3) ரூ1500 000
(4) ரூ1400 000
(5) ரூ1350 000

( _____ )

10. 31.03.2020இல் உள்ளவாறான சுல்தா PLC இன் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியானது, கடன்கொடுத்தோர் மீதிகளின் பட்டியல் மொத்தத்துடன் வேறுபட்டு காணப்பட்டிருந்தது. பரிசீலனையின் போது பின்வருவன தெரிய வந்தன.

- கடன்கொடுத்தோர் ஒருவர் மீது விதிக்கப்பட்டிருந்த வட்டி ரூ20000 கடன்கொடுத்தோர் பேரேட்டில் மட்டும் பதியப்பட்ருந்தது.
- கொள்வனவுகள் நாளேட்டின் மொத்தமானது ரூ50000 ஆல் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது.
- ரூ30000ற்கான வெளித்திரும்பல் அம்சம் ஒன்று ஏடுகளில் இருந்து விடுபட்டிருந்தது.

31.03.2020இல் இருந்தபடி கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் கடன்கொடுத்தோர் பட்டியல் மொத்தமானது எவ்வளவு தொகையால் வேறுபட்டுக் காணப்படுகிறது.

(1) ரூ30000
(2) ரூ70000
(3) ரூ50000
(4) ரூ20000
(5) ரூ60000

( _____ )

11,12ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு நிறுவனமொன்றின் சரக்கிருப்பின் உருப்படி தொடர்பான பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.

| திகதி | விபரங்கள் | அலகுகள் | அலகுக்கிரயம்(ரூ) |
|---|---|---|---|
| 2020.03.01 | மீதி | 4000 | 50 |
| 2020.03.12 | கொள்வனவுகள் | 8000 | 80 |
| 2020.03.20 | கொள்வனவுகள் | 12000 | 90 |
| 2020.03.25 | விற்பனைகள் | 20000 | - |
| 2020.03.31 | மீதி | ? | - |

அலகொன்றிற்கான விற்பனை விலை ரூ100 ஆகும்.

11. சரக்கிருப்பு வழங்கலின் போது நிறையிடப்பட்ட சராசரி முறையைப் பயன்படுத்தியிருப்பின் 2020.03.31இல் உள்ளவாறான சரக்கிருப்பின் கிரயம் என்ன?

(1) ரூ200000
(2) ரூ146000
(3) ரூ344000
(4) ரூ320000
(5) ரூ360000

( _____ )

12. சரக்கிருப்பு வழங்கலின் போது “முதல் உள் முதல் வெளி” (FIFO) முறையைப் பயன்படுத்தி 2020.03.31இல் முடிவடைந்த மாதத்திற்கான மொத்த இலாபம் யாது?

| | | |
|---|---|---|
| (1) ரூ400000 | (2) ரூ440000 | (3) ரூ360000 |
| (4) ரூ200000 | (5) ரூ320000 | |

( ______ )

13. காந்தி இலாப நோக்கமற்ற நிறுவனமானது ஒரு நூல்நிலையம் அமைப்பதற்காக ரூ1500000 விசேட நன்கொடையாக பெற்றுக் கொண்டது. இதில் ரூ500000 நூல்நிலையம் அமைப்பதற்காக பயன்படுத்திக் கொண்டது. மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் பின் கட்டிடக்கணக்கு, திரண்ட நிதிக்கணக்கு, விசேட நன்கொடைக் கணக்கு போன்றவற்றில் காணப்படும் மீதிகள் முறையே

| கட்டிடக்கணக்கு (ரூபா) | திரண்டநிதிக்கணக்கு (ரூபா) | கட்டிடநிதிக்கணக்கு (ரூபா) |
|---|---|---|
| (1) 500000 | 500000 | 1500000 |
| (2) 500000 | 500000 | 1000000 |
| (3) 1500000 | 1500000 | 0 |
| (4) 1500000 | 0 | 1500000 |
| (5) 500000 | 1500000 | 0 |

( ______ )

14.15 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக. பின்வரும் தகவல்கள் 31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சுகந்தா PLC யுடன் தொடர்பானவையாகும்.

| விபரம் | ரூ1000ல் |
|---|---|
| விற்பனைகள் | 6000 |
| விற்பனைக்கிரயம் | 3000 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 1500 |
| இயந்திரவிற்பனை மீதான இலாபம் | 400 |
| வருமானவரிச்செலவு | 550 |
| செலுத்திய இடைக்கால பங்குலாபம் | 500 |
| மீள்மதிப்பீட்டின் மிகை/பற்றாக்குறை | |
| - காணி | 500 |
| - கட்டடம் | 900 |
| - அலுவலக உபகரணம் | (300) |

31.03.2020இல் காணி, கட்டிடம், அலுவலக உபகரணம் என்பன இரண்டாவது தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. 31.03.2018இல் முடிவுற்ற ஆண்டு காலத்தில் காணி ரூ100000 நட்டத்துடன் கட்டடம் ரூ300000 நட்டத்துடனும் அலுவலக உபகரணம் ரூ200000 மிகையுடனும் முதலாவது தடவையில் மீள்மதிப்பீடு செய்து புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன

14. LKAS - 1 இன்படி 31.03.2020இல் முடிவடைந்த வருடத்துக்கான இனங்காணப்பட்ட மொத்த வருமானம் மற்றும் ஏனைய முற்றும் இடங்கிய வருமானம் என்பன யாவை?

| மொத்த வருமானம் (ரூ1000) | ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ1000) |
|---|---|
| (1) 7800 | 1000 |
| (2) 4800 | 800 |
| (3) 4800 | 1000 |

(4) 6400 800

(5) 7800 800

( _____ )

15. LKAS - 1 இன்படி 31.03.2020இல் முடிவடைந்த வருடத்துக்கான மொத்த முற்றும் அடங்கிய வருமானம் மற்றும் 31.03.2020இல் இருந்தபடியான நிறுத்திவைத்த வருவாய் என்பன யாவை?

| மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூ1000) | நிறுத்தி வைத்த வருவாய் (ரூ1000) |
|---|---|
| (1) 1650 | 1150 |
| (2) 7800 | 1150 |
| (3) 2450 | 1650 |
| (4) 2450 | 1150 |
| (5) 7800 | 1650 |

( _____ )

1617 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களை பயன்படுத்துக.

31.03.2019ளஇல் உள்ளவாறான நர்மதா PLC நிறுவனத்தின் நிதிநிலைமைக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் மீதிகள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| விபரம் | ரூ1000ல் |
|---|---|
| கூறப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் ரூ20 வீதம் வழங்கப்பட்ட | |
| 200000 சாதாரண பங்குகள் | 4000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 1500 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 2000 |
| | 7500 |

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் கம்பனியால் செய்யப்பட்ட பங்குவழங்கல் தொடர்பான தகவல்கள் வருமாறு.

| திகதி | விபரம் |
|---|---|
| 01.05.2019 - | ஒவ்வொன்றும் ரூ30 ஆன 100000 சாதாரண பங்குகள் பொதுவழங்கல் செய்யப்பட்டன. 150000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. விகிதாசாரப்படி பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. |
| 01.10.2019 - | 01.04.2018ல் காணப்பட்ட ஒவ்வொரு நான்கு பங்குகளுக்கு ஒரு பங்கு வீதம் பங்கொன்று ரூ30ல் வழங்கி நிறுத்தி வைத்த வருவாய் ஆனது மூலதனம் ஆக்கப்பட்டது. |
| 01.01.2020 - | 01.04.2018ல் காணப்பட்ட ஒவ்வொரு இரண்டு பங்குகளுக்கு ஒரு பங்கு வீதம் உரித்து வழங்கல் செய்யப்பட்டது. இத்தினத்தில் சாதாரண பங்கு ஒன்றின் விலை ரூ32 ஆகும். சாதாரண பங்கு தாரர் தமது உரிமைப்பங்குக்கு பணம் செலுத்தி பெற்றுக் கொண்டிருந்தனர். |

31.03.2020ல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாபம் ரூ3600000 ஆகும்.

16. மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக ஏற்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் எவ்வளவு?

(1) ரூ6200 000 (2) ரூ11700 000 (3) ரூ9600 000

(4) ரூ3000 000 (5) ரூ7700 000

( ______ )

17. 31.03.2020ல் உள்ளவாறான கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் மற்றும் உரிமையாண்மை.

| | கூறப்பட்ட பங்குமூலதனம்(ரூ) | உரிமையாண்மை(ரூ) |
|---|---|---|
| (1) | 11700 000 | 13600 000 |
| (2) | 7700 000 | 17300 000 |
| (3) | 10200 000 | 13600 000 |
| (4) | 10200 000 | 17300 000 |
| (5) | 11700 000 | 17300 000ளளள |

( ______ )

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 18,19ஆம் வினாக்களிற்கு விடையளிக்குக.

நிறுவனமொன்று கணக்கீட்டுக் காலம் ஒன்றுக்கான உற்பத்திக் கிரயத்தினை பின்வருமாறு கணித்துள்ளது.

| | ரூ1000ல் |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 3200 |
| நேர்க்கூலிகள் | 800 |
| ஏனைய மாற்றல் கிரயங்கள் | 1200 |
| | 5200 |
| <u>இக்காலப்பகுதியில் சரக்கிருப்பில் ஏற்பட்ட தேறிய மாற்றங்கள்</u> | |
| - மூலப்பொருள்கள் | (200) |
| - குறைவேலைகள் | 600 |
| - முடிவுப்பொருள்கள் | 400 |
| உற்பத்திக் கிரயம் | 6000 |

மேலுள்ள உற்பத்திக் கிரயத்தினைக் கணிக்கும் போது பின்வரும் மேலதிக தகவல்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை.

- உற்பத்தியில் பயன்படுத்திய இயந்திரத்திற்கான ரூ80000 வருடாந்த பெறுமானத்தேய்வு விடுப்பட்டிருந்தது.
- உற்பத்தியுடன் தொடர்புடைய பதியப்படாத மின்சாரச் செலவுகள் ரூ240000 ஆகும்.
- உற்பத்தி மேந்தலைக்கிரயமானது அலுவலக வாடகை ரூ320000ஐ உள்ளடக்கியுடள்ளது.
- இக்காலப்பகுதி முடிவிலுள்ள குறைவேலை ஆனது ரூ120000இனால் குறைத்து எழுதப்பட்டுள்ளது.
- சரியான கையாளுதல் இல்லாமையினால் ரூ160000 பெறுமதியான மூலப்பொருட்கள் முழுமையாக அழிவடைந்திருந்தன.

18. மேலுள்ள மேலதிக தகவல்களை கருத்திற் கொண்டதன் பின்னரான குறித்த காலத்திற்குரிய உற்பத்திக்கிரயம் எது?

(1) ரூ5620 000 (2) ரூ5880 000 (3) ரூ5600 000

(4) ரூ5320 000 (5) ரூ5560 000

( ______ )

19. மேலுள்ள மேலதிக தவகல்களை கருத்திற் கொள்வதற்கு முன்னரான குறித்த காலத்திற்குரிய விற்பனைக் கிரயம் எது?

(1) ரூ5600 000 (2) ரூ6000 000 (3) ரூ5400 000

(4) ரூ5000 000 (5) ரூ5200 00

( ______ )

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 20ஆம் 21ஆம் வினாக்களுக்கு விடை தருக.

<u>பொருள் G10 உடன் தொடர்பான தகவல்கள்</u>

ஆகக்குறைந்த நுகர்வு 1000 அலகுகள்

முதன்மை காலம் - ஆகக்கூடியது 6 மாதங்கள்

ஆகக்குறைந்தது 4 மாதங்கள்

உச்சஇருப்பு மட்டம் - 30000 அலகுகள்

மறுகட்டளையிடுமட்டம் - 18000அலகுகள்

20. பொருளின் G10இன் இழிவு இருப்பு மட்டம்,

(1) 12000 அலகுகள் (2) 24000 அலகுகள் (3) 10000 அலகுகள்

(4) 6000 அலகுகள் (5) 8000 அலகுகள்

( ______ )

21. பொருள் G10இன் மறுகட்டளைத்தொகை

(1) 16000 அலகுகள் (2) 12000 அலகுகள் (3) 15000 அலகுகள்

(4) 14000 அலகுகள் (5) 20000 அலகுகள்

( ______ )

22. வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கம்பனி ஒன்றின் நடைமுறை விகிதம் 2:1 ஆகவும் திரவக விகிதம் 0.8:1 ஆக இருந்தது. பின்வரும் கொடுக்கல் வாங்கலில் எவை நடைமுறை விகிதத்தில் குறைவினையும் இவ்திரவக விகிதத்தில் குறைவினையும் ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

(1) நீண்டகாலக் கடனொன்றைப் பெறல்

(2) கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு

(3) கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட சரக்கு

(4) வங்கி மேலதிகப்பற்று உடமையாளரது சொந்தப் பணத்திலிருந்து கொடுத்த தீர்க்கப்பட்டது.

(5) கடன்பட்டோரிலிருந்து பெற்ற காசு (

______ )

23. பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் 31.03.2020இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

| விபரம் | ரூ1000 |
|---|---|
| விற்பனைகள் | 1200 |
| சராசரி சரக்கிருப்புக்கள் | 150 |

இந்நிறுவனத்தின் மொத்தஇலாப எல்லை (விற்பனை விலையில்) 25% ஆகும்.

31.03.2020இல் முடிவடைந்த வருடத்திற்கான கடன் சேகரிப்புக்காலம் 30 நாட்கள் ஆகும். வருடமொன்றுக்கான 360நாட்கள் உள்ளதெனக் கொள்க.

இக்கம்பனியின் 31.03.2020இல் முடிவடைந்த வருடத்திற்கான இருப்பு உடமைக்காலம், சராசரி கடன்பட்டோர்.

| | இருப்பு உடமைக்காலம்(நாட்கள்) | சராசரி கடன்பட்டோர்(ரூபா) |
|---|---|---|
| (1) | 45 | 120000 |
| (2) | 45 | 150000 |
| (3) | 60 | 120000 |
| (4) | 60 | 150000 |
| (5) | 60 | 100000 |

( ______ )

24. சம்பனி ஒன்றின் தொழிற்சாலை ஊழியர்களுக்கு அலகொன்றிற்கு ரூ10 வீதம் செலுத்தப்படுகின்றது. வேலை நாளொன்றில் ஒவ்வொரு 15நிமிடங்களுக்கும் 10 அலகுகள் உற்பத்தி செய்யப்படல் வேண்டும். நாளொன்றுக்கு 8மணித்தியாலங்கள் வீதம் வாரமொன்றுக்கான அடிப்படை வேலை நேரம் 40 மணித்தியாலங்கள் ஆகும். மேலதிக வேலைகளுக்கு அலகொன்றுக்கு ரூ15 வீதம் செலுத்தப்படும். குறித்த வாரத்தில் 2ஊழியர்களான சிங்கர், சங்கர் முறையே 1600, 2000 அலகுகளை உற்பத்தி செய்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் குறித்த வாரத்திற்கு பெறும் மொத்தக்கூலி.

| | சிங்கர்(ரூ) | சங்கர்(ரூ) |
|---|---|---|
| (1) | 16000 | 20000 |
| (2) | 16000 | 22000 |
| (3) | 16000 | 30000 |
| (4) | 18000 | 20000 |
| (5) | 18000 | 30000 |

( ___.

25. நிதி அறிக்கையிடல் எண்ணக்கரு ரீதியான சட்டத்தின் படி பொது நோக்கத்திற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்படும் அடிப்படையான எடுகோள் எது?

(1) அட்டுறு (2) கொள்கை மாறாமை

(3) பொருள்ண்மை (4) செயலறிவு

(5) தொடர்ந்து செல்லல்

( ______ )

26தொடக்கம் 40வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.

26. கம்பனியொன்று தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் எந்த கணக்கீட்டு எண்ணக்கருவை மிகவும் சிறப்பாக விபரிக்கிறது என்பதைக் குறிப்பிடுக.

| | சந்தர்ப்பம் | கணக்கீட்டு எண்ணக்கரு |
|---|---|---|
| A- | இருப்புகளை அதன் கிரயம் மற்றும் | |

தேறிய தேறத்தக்க பெறுமதி என்பவற்றுள் குறைவானதில் அளவீடு செய்தல் ------------------

B- ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தை பெற்றுக் கொண்ட கிரயத்தில் அளவீடு செய்தல் ------------------

C- வியாபாரமொன்றின் நிதிக்கூற்றுகளில் ஊழியர்களின் தேர்ச்சிகளை இனங்காண தேவையில்லை ------------------

D- வாடிக்கையாளருக்கு பொருட்களை விநியோகிக்கும் நேரத்தில் அதனை விற்பனை வருமானமாக இனங்காணல் ------------------

27.28.29 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஜொனி PLC இன் 2020 மார்ச் மாதத்தில் இடம்பெற்றுள்ளன. இக்கணக்கீட்டு வருடமானது 31மார்ச் மாத்தில் முடிவடைகின்றது.

(1) வங்கியிலிருந்து ரூ1000000 கடன் ளுளுளுளபெறப்பட்டது
(2) ரூ600000 விலையிலான சரக்குகள் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.
(3) ரூ450000 கிரயமுடைய சரக்குகள் ரூ750000 விலையில் கடனுக்கு விற்கப்பட்டன.
(4) காணியானது முதல் தடவையாக மறுமதிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூ500000 நட்டம் ஏற்பட்டுள்ளது.

27. பின்வரும் கூற்றுக்களில் எக்கூற்று மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் தேறிய தாக்கத்தைக் குறிக்கின்றது.

<u>விளைவு</u> — கொடுக்கல் வாங்கல்

A- சொத்துகளில் அதிகரிப்பும் சொத்துக்களில் குறைவும் ------------------

B- சொத்துக்களில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் அதிகரிப்பும் ------------------

C- சொத்துக்களில் குறைவும் உரிமையாண்மையில் குறைவும் ------------------

D- சொத்துக்களில் அதிகரிப்பும் பொறுப்புக்களில் அதிகரிப்பும் ------------------

28. மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் பதிய பயன்படுத்தப்படும் மூலப்பதிவேட்டினைக் குறிப்பிடுக.

| <u>கொடுக்கல் வாங்கல்</u> | <u>மூலப்பதிவேடு</u> |
|---|---|
| (1) | ------------------ |
| (2) | ------------------ |
| (3) | ------------------ |
| (4) | ------------------ |

29. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பொதுபேரேட்டில் எந்தக் கணக்கு வகையின் கீழ்ப் பதியப்படும் என்பதனை "✓" குறியீட்டின் மூலம் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் | சொத்து | பொறுப்பு | உரிமை யாண்மை | வருமானம் | செலவு |
|---|---|---|---|---|---|
| (1) | ________ | ________ | ________ | ________ | ________ |
| (2) | ________ | ________ | ________ | ________ | ________ |
| (3) | ________ | ________ | ________ | ________ | ________ |
| (4) | ________ | ________ | ________ | ________ | ________ |

30. பின்வரும் ஒவ்வொரு உருப்படியும் நிதிக்கூற்றுக்களில் எந்த மூலத்தில் இனங்காணப்படுகிறது எனப்தைக் குறிப்பிடுக.

| | உருப்படிகள் | மூலம் |
|---|---|---|
| A- | வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகள் | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| B- | விற்பனை உத்தரவாதச் செலவு | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| C- | முற்பண வாடகை வருமானம் | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| D- | செலுத்திய பங்குலாபம் | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |

31. லலிதா PLC ஆனது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்வரும் விடயங்களை சீராக்கம் செய்வதனால் அவை இலாபத்தில் அதிகரிப்பினையா(I) அல்லது குறைவினையா(D) அல்லது மாற்றங்களை ஏற்படுத்தாதா(NC) என்பதனைக் குறிப்பிடுக. (இவ்விடயங்கள் புத்தகங்களில் இன்னமும் சீராக்கப்படவில்லை).

| | | இலாபத்தில் தாக்கம் (I,D,NCஎனக் குறிப்பிடுக) |
|---|---|---|
| A- | வாடிக்கையாளரது நேரடிவைப்பு | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| B- | கொடுத்தகழிவு மறுக்கப்பட்டமை | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| C- | முற்பணக் காப்புறுதிக் கட்டணம் | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ |
| D- | முற்பண விற்பனை வருமானம் | _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _s |

32. வரையறுக்கப்பட்ட அசிதா கம்பனியானது மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் கம்பனி என்பதுடன் 31.03.2020இல் இக்கம்பனியின் இருப்பின் கிரயம் ரூ1500 மில்லியனாகும். தொழில்நுட்பகோளாறு காரணமாக அதில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூ300மில்லியன் கிரயம் கொண்ட மோட்டார் வாகனத்தின் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை விலை ரூ225மில்லியனாக

மதிப்பிடப்பட்டதுடன் அவ்விலைக்கு அதனை விற்பனை செய்ய வேண்டுமாயின் 25மில்லியன் செலவில் அதனை நவீனமயப்படுத்தவும் வேண்டும்.

அ) 31.03.2020இல் இருப்பின் தேறிய தேறத்தக்க பெறுமதியைக் கணிக்க.

ரூ……………………

ஆ)இருப்பினை பதிவழிப்பதற்கான நாட்குறிப்புப் பதிவினை எழுதுக.

| விபரம் | வரவு (ரூ.மில்லியன்) | செலவு (ரூ.மில்லியன்) |
|---|---|---|
| ------------------------------ | ------- | ------- |
| ------------------------------ | -------- | -------- |
| ------------------------------ | -------- | -------- |

<u>பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 33ஆம் 34ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக</u>.

நிமல் மற்றும் கமல் பங்குடமை வணிகத்தின் 31.03.2020இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் நடைமுறைக்கணக்குகள் பின்வருமாறு காணப்பட்டிருந்தது.

பங்காளர் நடைமுறைக் கணக்கு

| | நிமல் | கமல் | | நிமல் | கமல் |
|---|---|---|---|---|---|
| பற்றுக்கள் | 200 | 100 | 01.0417 மீ/வ | 200 | 150 |
| 31.03.18 மீ/செ | 370 | 280 | மூலதன வட்டி10% | 100 | 50 |
| | | | சம்பளம் | 150 | 100 |
| | | | இலாபப்பங்கு | 120 | 80 |
| | 570 | 380 | | 570 | 380 |

33. பங்காளரிடையே பங்குடமை ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தாது 1890ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் 24ஆம் பிரிவின்படி இப்பங்குடமை வணிகம் செயற்படுமாயின் 31.03.2019இல் முடிவடையும் வருடத்திற்கான நிமலின் இலாபப்பங்கு எவ்வளவு?

ரூ……………………

34. 31.03.2020இல் புதிய பங்காளராக விமல் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் அவர் ரூ500000வை மூலதனமாக பங்குடமையில் முதலீடு செய்தார். இத்திகதியில் நன்மதிப்பின் பெறுமதி ரூ300000 மாக மதிப்பிடப்பட்டது. நன்மதிப்புக் கணக்கொன்று ஏடுகளில் பேணப்படுவதில்லை என்பதுடன் நன்மதிப்புத் தொடர்பாக சகல சீராக்கங்களும் மூலதனக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படும். புதிய பங்குடமையில் பங்காளரிடையே இலாப நட்டங்கள் சமம்மாகப் பகிரப்படும். மற்றைய ஏற்பாடுகள் முன்னர் இருந்தபடி தொடர்ந்து பேணப்படும். புதிய பங்காளர் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஒவ்வொரு பங்காளரது உரிமையாண்மையைக் கணிக்க?

நிமல் ரூ…………………… கமல் ரூ……………………

விமல் ரூ……………………

35. LKAS -1 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வழுக்களில் ஏற்படும் மாற்றங்கள்) இன்படி பின்வரும் நிலைமைகள் கணக்கீட்டு கொள்கைகள் மாற்றமொன்றினைப் பிரதிநிதிதுவப்படுமா என்பதைக் குறிப்பிடுக.

<u>நிலைமைகள்</u> கணக்கீட்டு கொள்கையில் மாற்றம்

ஆம்/இல்லை

A- கட்டிடத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் 20இலிருந்து 30வருடங்களுக்கு மாற்றுதல் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

B- கையிருப்பு முறையானது முதல்வந்தது முதல் சென்றது என்ற முறையிலிருந்து நிறையிடப்பட்ட சராசரி முறைக்கு மாற்றுதல் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

C- வாகனத்தினது பெறுமானத்தேய்விடல் முறையினை நேர்கோட்டு முறையில் ஒடுங்குபாக முறைக்கு மாற்றுதல் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

D- வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகளின் மதிப்பீட்டினை மாற்றியமைத்தல் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

36. பொருத்தமான நிரல்களின் கீழ் "✓" எனக் குறியிடுவதன் மூலம் உற்பத்திக் கம்பனி ஒன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான காசுப்பாய்ச்சல்களை LKAS-7 (காசுப்பாய்ச்சல் கூற்று) இன்படி அவை செயற்பாட்டு, முதலீட்டு, அல்லது நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் என வகைப்படுத்துக.

| | | நடவடிக்கைகள் | |
|---|---|---|---|
| கொடுக்கல் வாங்கல் | செயற்பாடு | முதலீடு | நிதியிடல் |
| A- நிதிக்குத்தகையில் செலுத்திய தவணைக்கட்டணம்(வட்டடி தவிர) | _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ |
| B- பங்குலாபக்கொடுப்பனவு | _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ | _ _ _ _ _ |
| C- கடன்வட்டி செலுத்தியது | _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ | _ _ _ _ _ |
| D- நிலையானவைப்பு வட்டி கிடைத்தல் | _ _ _ _ _ _ | _ _ _ _ _ _ | _ _ |

37. நிறுவனமானது அலுவலக வாடகையாக ரூ60000 காசோலை ஒன்று 2020 ஜனவரி மாதத்திற்கென வழங்கப்பட்டது. அக்காசோலையினை எழுதும் பொழுது ஏற்பட்ட பிழையினால் அக்காசோலையானது மறுக்கப்பட்டிருந்தது. மறுக்கப்பட்ட காசோலை அத்துடன் 2020 பெப்ரவரி மாத வாடகை என்பவற்றிற்காக ரூ120000 தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது. மறுக்கப்பட்ட காசோலை புதிதாக வழங்கப்பட்ட காசோலை தொடர்பாக குறித்த நிறுவனத்தின் புத்தகங்களில் பதிந்து கொள்வதற்கான நாட்குறிப்பு பதிவுகளை எழுதுக.

அ) மறுக்கப்பட்ட காசோலைக்கு

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

ஆ) புதிய காசோலையை வழங்குதல்

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

__________________________________________

__________________________________________

38. சாயா கம்பனி கபிலா கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் பொருட்டு தயாரித்து வழங்கிய பட்டியிலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை.

| | |
|---|---|
| மொத்தப்பட்டியல் பெறுமானம் (ரூ1000 இல்) | 1250 |
| அனுமதிக்கப்பட்ட வியாபாரக்கழிவு | 20% |
| பெறுமதிசேர் வரி | 15% |

சாயா கம்பனி, கபிலா கம்பனிஆகிய இரண்டும் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்யப்பட்டவையாகும். இந்நடவடிக்கையினை கபிலா கம்பனியினது புத்தகங்களில் பதிந்து கொள்வதற்கு தேவைப்படும் நாட்குறிப்புப் பதிவினை எழுதுக. (விளம்பல் தேவையில்லை)

__________________________________________

__________________________________________

__________________________________________

39. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கிரய வகைப்படுத்தலிற்கான நோக்கங்களைக் குறிப்பிடுக.

| | கிரய வகைகள் | கிரயவகைப்படுத்தலுக்கான நோக்கம் |
|---|---|---|
| A- | உற்பத்தி கிரயமும் காலக்கிரயமும் | __________________ |
| B- | மாறும் கிரயமும் நிலையான கிரயமும் | __________________ |
| C- | கட்டுப்படுத்தக்கூடிய கிரயமும் கட்டுப்படுத்தமுடியாத கிரயமும் | __________________ |
| D- | தொடர்பான கிரயமும் தொடர்பற்ற கிரயமும் | __________________ |

40. வரையறுக்கப்பட்ட கவிதா நிறுவனம் 01.04.2020இல் ரூ400000 திரண்ட பெறுமானம் தேய்மானத்தையும் ரூ600000 முன்கொணரும் தொகையும் கொண்டதுமான இயந்திரம் ஒன்றினை வைத்திருந்தது. இயந்திரத்துக்கு நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு 20% ப்படி தேய்மானம் பதிவழிக்கப்படுகிறது. இவ் இயந்திரமானது 01.10.2019ல் ரூ750000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

அ) இயந்திரத்தின் மீள்மதிப்பீடு தொடர்பான நாட்குறிப்பு பதிவுகள்

__________________________________________

__________________________________________

__________________________________________

ஆ) 31.03.2019இல் முடிவடைந்த வருடத்திற்கான இயந்திரத்தின் மீதான பெறுமானத்தேய்வு எவ்வளவு?

ரூ……………………..

***